## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.136/2021.
Prosecution witness for P.W.6.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.சங்கர் ராஜா. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.07.2025.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து இருசக்கர வாகன மெக்கானிக்காக தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன மோகன்ராஜ் என்பவரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 23.12.2020 அன்று சுமார் இரவு 8.30 மணியளவில் இறந்துபோன மோகன்ராஜ் என்பவரும், அ.சா.1ம் ஆஜர் எதிரி மருந்து சாப்பிடுவதற்கு முன்பாக உணவு சாப்பிட வேண்டுமென்று சொன்னதால் ஆஜர் எதிரி ஆத்திரமடைந்து தனக்கு மனநிலை சரியாகிவிட்டது என்றும், ஏன் மருந்து சாப்பிட வேண்டுமென்றும் கேட்டு அன்று இரவு 9 மணியளவில் எதிரி தன் வீட்டில் முன் அறையில் இருந்த தன் தகப்பனாரான மோகன்ராஜை கீழே தள்ளி உலக்கையால் முகத்தில்

தாக்கியும், அதனால் மேற்படி மோகன்ராஜ் மூச்சு பேச்சு இல்லாமல் இறந்துவிட்டதாகவும், அதுகுறித்து நானும், பேச்சிமுத்து என்பவரும் கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு போனதாகவும், சம்பவம் குறித்து அ.சா.1 புகார் கொடுக்கச் சென்றதாகவும், பிறகு நாங்கள் 24.12.2020 அன்று மருத்துவமனைக்கு சென்று மோகன்ராஜை பார்த்தபோது போலீசார் பிரேத விசாரணை மேற்கொண்டார்கள் என்றும், அப்போது நான் உடனிருந்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது ஆஜர் எதிரி என் உறவினர் என்பதால் அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.07.28 18:49:07 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.